**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**ஜீவனாம்ச வழக்கு எண்:5/2024**
**மனுதாரர் வழக்கு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: (ம.சா.1) வேதநாயகி | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03ம் நாள் செவ்வாய்க்கிழமை மனுதாரர் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் எழுத்தர் சு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

***( எதிர் மனுதாரர் ஆஜர். )***

**ம.சா.1 – குறுக்கு விசாரணை (எதிர்மனுதாரர் தரப்பு ):–**

எங்கள் திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான். இத்திருமணம் உறவினர்கள் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பாப்பாத்தி என்பவர் மூலம் திருமணம் ஏற்பாடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவர் தாண்டாம்பாளையத்தை சேர்ந்தவர், அவர் தற்போது உயிருடன் தான் உள்ளார். திருமண ஏற்பாடுகள் 2,3 மாதங்கள் நடந்தது. திருமணத்தின் போது போட்டோ,ஆல்பம் போன்றவை எடுக்கப்பட்டது என்றால் சரிதான், அதில் அனைத்து நிகழ்வுகளும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி போட்டோ மற்றும் ஆல்பத்தை நீதிமன்றத்தில் சமர்பித்தேனா என்றால் ஒரு போட்டோவை மட்டும் சமர்ப்பித்துள்ளேன். நாங்கள் திருமணத்திற்கு பின்னிட்டு எல்லப்பாளையத்தில் எதிரிமனுதாரர் வீட்டில் வசித்து வந்தோம்.

2. எதிர்மனுதாரருக்கு இரண்டு சகோதரிகள் உள்ளனர் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே எதிர்மனுதாரரிடம் பேசி, பழகி நல்ல நட்புறவு இருந்தது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.03 08:52:36 +0530

என்றால் இல்லை ஒரு 10 நாட்கள் மட்டும் பேசி கொண்டோம். திருமணத்திற்கு முன்பு நான்கு, ஐந்து முறை எனது பெற்றோர் வீட்டிற்கு எதிர்மனுதாரர் வந்தார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் சகோதரிகள் எங்களது திருமணத்திற்கு பின்னிட்டு அவர்களது பெற்றோர் வீட்டிற்கு வரபோகத்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது வீட்டில் நான், எனது தம்பி, தகப்பனார் மற்றும் தாயார் ஆகியோர்கள் உள்ளோம். எதிர்மனுதாரரின் சகோதரிகளிடம் எனக்கு நல்ல உறவு முறை இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடும்பம் வேறு, அவருடைய சகோதரி குடும்பம் வேறு என்றால் சரிதான். எதிர்மனுதாரரோ, அவரது தாயாரோ அல்லது அவரது சகோதரிகளோ, எங்களது வாழ்க்கைக்கு எந்தவித தடையும் இல்லை என்றால் சரிதான்.

3. போட்டோவில் நான் அணிவித்த நகை மற்றும் கொடுத்த பணம் ஆகியவை இருந்தது என்றால் சரிதான். திருமண சமயத்தில் கொடுக்கப்பட்ட 25 பவுன் நகை வாங்கப்பட்டதற்கான ஆதரத்தை நீதிமன்றத்தில் சமர்பிக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் தான் முதன்முதலில் சேர்ந்துவாழ மனு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி மனுவின் பேரில் நடந்த வழக்கில் நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முடியாது என கூறியுள்ளேன் என்றால் சரிதான், அவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருந்ததால் அவ்வாறு கூறினேன். எதிர்மனுதாரர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருந்தார் என்ற விவரத்தை என்னுடைய மனுவிலோ, அல்லது வேறு எந்த இடத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் மேற்படி விவரங்களை கூறவில்லை என்றால் 8வது பத்தியில் சொல்லியுள்ளேன்.

4. மேற்படி தவறான உறவில் இருந்ததாக மனுதாரர் மீது நான் புகார்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.03 08:52:40 +0530

கொடுத்தேனா என்றால் காவல்நிலையத்தில் கொடுத்தேன் ஆனால் எடுக்கவில்லை. மேற்படி நான் புகார் கொடுத்ததற்கான ஆதரங்கள் எதையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழ விருப்பம்இல்லாததால் எதிர்மனுதாரர் மீது தவறான குற்றச்சாட்டை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் F.C.O.P.311/2019 என்ற எண்ணில் எதிர்மனுதாரர் சேர்ந்து பிழைப்பதற்காக போட்ட மனுவினை நான் சேர்ந்து பிழைக்க மறுத்துவிட்ட காரணத்தினால் எதிர்மனுதாரர் அந்த வழக்கை வாபஸ் பெற்றார் என்றால் சரியல்ல. ஆனால் அந்த மனு எதிர்மனுதாரரால் வாப்ஸ் பெறப்பட்டது என்றால் சரிதான். நான் சேர்ந்து வாழ மறுத்ததால் விவாகரத்து கோரி எதிர்மனுதாரர் மனுதாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து மனுவில் நான் சேர்ந்து வாழ்கிறேன் என்று கூறியதால் எதிர்மனுதாரர் மேற்படி விவாகரத்து மனுவை வாபஸ் வாங்கிவிட்டார் என்றால் சரியல்ல, நான் அவ்வாறு கூறவில்லை.

5. விவாகரத்து மனுவில் எனக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின் நீதிமன்றத்தில் ஆஜர் ஆனேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நான் விவாகரத்து கொடுக்கிறேன் என்று நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய போன்நெம்பர் 9715746369 ஆகும். அபிஸ்ரீ என்பது எனது மகள் ஆவார். ஒத்தப்பனை முத்துகவுண்டன்பாளையம் என்பது எனது அப்பா ஊர் ஆகும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள துணிகடை அபிஸ்ரீ என்ற பெயரில் நடத்தப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி துணிகடை எனது அப்பாவும், தம்பியும் நடத்தி வருகிறார்கள். **புகைப்படம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**. மேற்படி துணிகடை என்னால் நடத்தப்பட்டு என்னால் பராமரிக்கப்பட்டுவருகிறது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.03 08:52:45 +0530

என்றாலும், அதன் மூலம் நான் வருமானம் ஈட்டுகிறேன் என்றாலும் சரியல்ல. முத்துகவுண்டன்பாளையம் என்பது நெடுஞ்சாலை போக்குவரத்து அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். துணிக்கடை நடத்தப்படும் விவரமோ, அது எனது மகள் பெயரில் உள்ள விவரமோ நான் மனுவிலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்பிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது மகள் 21.07.2014ம் தேதி பிறந்தார். என் மகள் பிறந்ததில் இருந்து 6 மாதம் மட்டும் எதிர்மனுதாரர் வீட்டில் இருந்தேன், அதற்கு பின்னிட்டு எனது பெற்றோர்வீட்டில் தான் இருந்தேன் என்றால் சரிதான். 2016ம் வருடம் நான் எனது பெற்றோர் வீட்டில் இருக்கிறேன் என்றால் சரிதான்.

6. 07.04.2016ல் நானும், எனது தாயார் பூவாத்தாள், எனது சகோதரர் திருமூர்த்தி, எனது மாமன் பாலசுப்ரமணி ஆகியோர்கள் சேர்ந்து விவேகானந்தன் என்பவருக்கு ஒரு கிரய பத்திரம் எழுதி கிரயம்செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி சொத்து எனது மாமாவிற்கு சொந்தமாக இருந்ததால் வாரிசுகள் அனைவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் 07.04.2016ம் தேதியிட்ட கிரயபத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **07.04.2016ம் தேதியிட்ட கிரயபத்திரத்தின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் டிகிரி முடித்துள்ளேன். எ.ம.சா.ஆ.2 ல் ரூ.7,66,000/- நாங்கள் அனைவரும் சேர்ந்து கிரய தொகை பெற்றுக்கொண்டு கிரயம் கொடுத்தாக உள்ளது என்றால் எழுதி கொடுக்கும்போது அவ்வாறு தான் கொடுப்போம். மேற்படி ஆவணங்களை பொறுத்து எனக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 23.04.2024ம் தேதிய ஆவணத்தின் படி என்னுடைய சகோதரர் திருமூர்த்திக்கு எனது பெற்றோர் வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்களை எனது

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.03 08:52:51 +0530

தகப்பனார் குப்புசாமி செட்டிமெண்ட் செய்து வைத்ததாக உள்ளது என்றால் சரிதான், அந்த ஆவணம் என்னிடம் காட்டப்படுவதுதான். **அந்த ஆவணம் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த ஆவணத்தை பொறுத்தும் எனக்கு எந்த ஆட்சேபணையும்இல்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்களின் மதிப்பு ரூ.24,25,000/- என்றால் சரிதான். அது எனது பெற்றோரின் முன்னோர் வழியில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல, எனது தந்தை அவரது சுய சம்பாத்தியத்தில் வாங்கியது. அந்த ஆவணத்தில் சம்மத சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணளத்தில் 3வது பக்கத்தில் எனது மகளுக்கு ஏற்கனவே சொத்து வழங்கிவிட்டதால் அந்த தான செட்டில்மெண்ட் சாசனத்திற்கு ஆதரவாக சம்மத சாட்சியாக எனது மகளும் உனது சகோதரியான ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், முருங்கியாம்பாளயைம் கிராமம், முத்துகவுண்டன்பாளையம், க.எண்.1 என்ற முகவரியில் குடியிருக்கும் குப்புசாமி மகளும் பழனிச்சாமி மனைவியுமான வேதநாயகி அவர்கள் சம்மத சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துள்ளார் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7. சி.குப்புசாமி என்பது என்னுடைய தகப்பனார். எனது தகப்பனார் வழியில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் எனது தகப்பனார் 19.08.1981ம் தேதி பாகபிரிவினை செய்துகொண்ட பாகபிரிவினை ஆவணத்தின் சான்றிட்ட நகல் தான் என்னிடம் காட்டப்படுவதாகும். **அந்த ஆவணம் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஆவணத்தில் சி செட்டியூல் சொத்துக்களாக என்னுடைய தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 3 ஏக்கர் 87 செண்ட் ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதை எனது திருமணத்திற்கு முன்பே

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.02.03 08:52:56 +0530

விற்றுவிட்டார்கள். மேற்படி விற்பனை ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். என்னிடம் காண்பிக்கப்டும் புகைப்படம் எண்ணிக்கை 4 எனது மகள் பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம் என்றால் சரிதான். அந்த **புகைப்படம் எ.ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி புகைப்படங்கள் எனது அம்மா வீட்டில் எடுக்கப்பட்டது. மேற்படி புகைப்படங்கள் எடுக்கப்பட்டபோது எதிர்மனுதாரர் அங்கு இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை. எதிர்மனுதாரர் மேற்படி பிறந்தநாள் கொண்டாட்டம் அனைத்தையும் ஏற்பாடுசெய்தார் என்றும், அதனால் தான் எனது மகளையும் என்னையும் கேக் வெட்ட சொல்லிவிட்டு அவர் போட்டோ எடுத்து அதை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு எந்தெந்த வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ஸ்டேட் பேங்க் கந்தசாமிபாளையம், சிவகிரி மத்திய கூட்டுறவு வங்கி, மற்றும் சிவகிரி கனரா வங்கி ஆகிய கிளைகளில் எனக்கு வங்கி கணக்கு உள்ளது. மேற்படி 3 வங்கி கணக்குகளிலும் தற்போது வரவு செலவு செய்துவருகிறேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி 3 வங்கி கணக்கு விவரத்தையும் நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும். எதிர்மனுதாரிடம் இருந்து பிரிந்து சென்ற காலத்திய வங்கி வரவு செலவு கணக்குகளையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலும்.

**மறுவிசாரணை: இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.02.03 08:53:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.